Private
E-Sevai
Center
CSC Center
STAR RAINBOW
SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkural@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

RS Polyclinic

இந்திய ரயில்வே சார்பில் 1 லட்சம் இடங்களில் தூய்மைப் பணி செய்து சாதனை

சென்னை – 10 நவம்பர், 2026 இந்திய ரயில்வே துறை சார்பில், 2026 அக்டோபர் 2 முதல் 31- ம் தேதி வரை தூய்மைப் பணி நடைபெற்றது. சிறப்பு தூய்மை இயக்கம் 6 மூலம், தூய்மைப்பணி, பழைய கழிவுகளை அகற்றுதல், மின் கழிவு மேலாண்மை, கோப்புகள் மேலாண்மை உள்ளிட்டவை வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே துறை தெரிவித்துள்ளது. ரயில் நிலையங்கள், ரயில்வே அலுவலகங்கள் என 1 லட்சத்துக்கும் மேற்பட்ட இடங்களில் தூய்மைப்பணி நடைபெற்றது. பழைய கழிவுப்பொருட்கள் விற்பனை மூலம் 628.49 கோடி ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பரிந்துரைத்த மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டது. ரயில்வே ஊழியர்களின் ஒத்துழைப்புடன் இந்த தூய்மைப்பணி சாத்தியமானதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.